2016 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உதவிப் பொறியாளர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்றால், 126 மின் மாற்றிகள் இருக்க வேண்டும். பர்கூர் மலைப் பகுதியில் 30 மின் மாற்றிகள்தான் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தொடர் செலவினமாக 50 இலட்சம் ரூபாய் ஆகிறது. மலைவாழ் மக்களுக்கு ஏதாவது தேவை என்றால் அங்கு உடனே ஆய்வு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருப்பதால், உடனடியாக ஆய்வு செய்து, அது முடிந்தவுடன், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அந்தப் பகுதிகளில் பிரிவு அலுவலகம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யப்படும் என்று பதில் அளித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, குறிப்பாக பர்கூர் மலைவாழ் மக்களின் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

83—

மீன் இறங்குதளம்

***1355—திரு. எம். தமிமுன் அன்சாரி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகூர் கிராமம், வெட்டாறு பகுதியிலுள்ள மீன் இறங்குதளத்தினை விரிவுபடுத்தவும், விசைப் படகுகளுக்கான அணையும் தளம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகூர் மீனவ கிராமம், வெட்டாறு பகுதியில், உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் கண்ணாடி நாரிழைப் படகுகள் நிறுத்திட 12.99 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒரு புதிய மீன் இறங்குதளம் அமைக்கப்பட்டுள்ளது. அதனால் வெட்டாறு பகுதியில் மீன் இறங்குதளத்தினை விரிவுபடுத்தி, விசைப்படகு மீன்பிடித் துறைமுகமாக மாற்றி அமைத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என்னுடைய கேள்விக்கு 'இப்போது அதற்கு வாய்ப்பில்லை' என்ற விதத்தில் பதிலை அளித்திருக்கின்றார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நாகூரில் தற்போது உள்ள மீன் பிடி இறங்குதளத்திற்கு அருகில் 700 படகுகளை நிறுத்தக்கூடிய வசதி இருக்கிறது. அதை விரிவுபடுத்துகின்றபோது, கூடுதலாக அங்கு படகுகளை நிறுத்தக்கூடிய வாய்ப்புகள் உண்டு. எதிர்காலத்தில் அங்கு ஒரு மீன்பிடித் துறைமுகம் அமையுமேயானால், ஏறத்தாழ 2,000 படகுகள் அங்கு வரக் கூடிய வாய்ப்புகள் இருக்கும், அது தொழில் வளர்ச்சிக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும் என்ற கோரிக்கையை நாகூரில் உள்ள மீனவ சமுதாய மக்கள் என்னிடம் வைத்தார்கள். இதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும், தற்போது அந்த ஆறு ஆழமானதாக இருக்கிறது. அங்கே வடக்குப் பகுதியில் 150 மீட்டருக்கு கற்களைக் கொட்டி ஒரு தடுப்பணைபோல கட்டியிருக்கிறார்கள். அதனை 300 மீட்டர் வரை நீட்டிக்க வேண்டும் என்று மீனவ சமுதாய மக்கள் கோரிக்கை

வைத்திருக்கின்றார்கள். அதன் எதிர்புறமும் 300 மீட்டருக்குக் கற்களைக் கொட்ட வேண்டும். ஆக, இருபுறமும் அந்தக் கற்களைக் கொட்டி தடுப்பு ஏற்படுத்துவதன் மூலமாக ஆறு தூர்ந்து போகாமல் இருக்கும். மண் அதில் அலையாமல் இருக்கும். இதன்மூலமாக படகுப் போக்குவரத்து எளிதாக இருக்கும் என்ற அந்தக் கோரிக்கையை என் தொகுதியிலுள்ள மீனவ சமுதாய மக்கள் வைத்திருக்கின்றார்கள். இதற்கு நம்முடைய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீனவர்களின் கலங்கரை விளக்கமாகவும், மீனவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் இருந்து வருகிறார்கள். வெட்டாறு பகுதியில், உலக வங்கித் திட்டத்தின்கீழ் ரூ.12.99 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஓர் இறங்குதளத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அமைப்பதற்கு உத்தரவிட்டு, அதனைத் தொடர்ந்து 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில், வெட்டாற்றின் தெற்குக் கரையில் 300 மீட்டர் நீளத்தில் தூண்டில் வளைவும், அதேபோன்று நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு 45 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவு செய்து எல்லோரும் பயன்படுத்தக்கூடிய வகையில் ஒரு புதிய, நவீன வசதிகளுடன்கூடிய ஒரு* Fishing Harbour-*ஐ, அதாவது மீன்பிடித் துறைமுகத்தை அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அந்தத் துறைமுகமும்கூட நாகூருக்கு அருகில்தான் இருக்கின்றது. எனவே, அதனைக்கூட அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, நாகூர் வெட்டாறு பகுதியில் அமைந்திருக்கின்ற, இத்தனை சிறப்பு அம்சங்களையும் கொண்ட, 12 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, மீனவர்கள் பயன்பாட்டிற்குள்ள மீன் இறங்குதளத்தை நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15-7-2015 அன்று திறந்து வைத்திருக்கின்றார்கள்.*

முற்பகல் 10-25

மாண்புமிகு உறுப்பினர் அந்த Breakwater-ஐ extend செய்ய வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்கள்கூட அதில் மிகவும் அக்கறை காட்டியுள்ளார்கள். எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மற்றும் மாவட்ட அமைச்சர் அவர்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்றதன் காரணமாக, பெங்களூரிலே இருக்கின்ற CICEF என்று சொல்லக்கூடிய Central Institute of Coastal Engineering for Fishery-ஐ சார்ந்த உயர்மட்டக் குழு இன்றைக்கு அந்த வெட்டாறு பகுதியை ஆய்வு செய்கிறார்கள். அவர்கள் தருகின்ற அந்த ஆய்வறிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அதன் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

84—

சிப்காட் தொழிற்பேட்டை

***1871—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் பகுதியில் புதிய சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்